# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப.,(ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 85/பேரூ/2024**
**நாள் : 15.11. 2024**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை – 18, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி, என்பவரின் 14.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.11.2023 அன்று பெறப்பட்டு, 85/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

“வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் தெருநாய்கள் அதிக அளவில் உள்ளன. பெரும்பாலான நாய்களுக்கு ரேபிஸ் உள்ளிட்ட நோய்கள் உள்ளன. நாய்களுக்கு பயந்து இப்பகுதிகளில் வாழும் பொது மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகிறார்கள். தெரு நாய்கள் குழந்தைகள், பள்ளி மாணவ மாணவியர்கள், பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை நடந்து செல்வோர்களை கடித்து விடுவதோடு, இரண்டு சக்கர வாகனங்களில் செல்வோர்களின் முன் குறுக்கே செல்வதால், வாகன ஓட்டிகள் கீழே விழுந்து சில சமயங்களில் இறக்கவும் நேரிடுகிறது. இப்பகுதியில் வளர்க்கப்படும், ஆடு, மாடு, கோழி போன்றவைகளையும் தெருநாய்கள் கடித்து விடுவதால் கால்நடைகள் இறக்க நேரிடுகிறது. மேலும் வீடுகளில் நாயை செல்லபிராணியாக வளர்த்து பின்னர் தெருக்களில் விட்டு விடுவதால் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து புகாரினை செயல் அலுவலர் தேர்வு நிலை பேரூராட்சிக்கு, 14.10.2023 தேதியில் (RT475885575232) பதிவு தபாலில் அனுப்பி இருந்தும் இதுநாள் வரை சிறு நடவடிக்கை கூட எடுக்கவில்லை. எனவே பொது மக்கள் அச்சமில்லாமல் வெளியே சென்று வர The Animal Birth Control Rules 2023 விதி 9 (4) –ன் படி தெரு நாய்களின்

இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தியும், அனைத்து வார்டுகளிலும் சுற்றி திரியும் தெரு நாய்களைப் பிடித்து கருத்தடை செய்தும், வெறிநாய் தடுப்பூசி (ARV) போட்டும் தெரு நாய்களை கட்டுபடுத்த நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசாணை (Ms) நிலை எண்.99 – Personnel and Administrative Reforms (A) Department Date 21.09.2015–ன் படி எனது மனுவை பெற்று கொண்ட முப்பது தினங்களுக்குள் நடவடிக்கை எடுத்து, விபரம் தெரிவித்து இருக்க வேண்டும். ஆனால் இதுநாள் வரையிலும் நடவடிக்கை எடுக்க தவறிய செயல் அலுவலர் அவர்கள் மீது கடுமையான ஒழுங்குநடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.09.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 09.10.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருநாய்களை கட்டுப்படுத்துவதற்கு பிராணிகளின் பிறப்பு கட்டுப்பாடு (நாய்கள்) விதிகள் 2001 பிரிவு 4–ன்படி இந்திய பிராணி நலவாரிய நிதி உதவியுடன் நாய்களுக்கு பிறப்பு தடுப்பு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்து திண்டுக்கல் விலங்குகள்நல வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், மேலும் தொடர் நினைவூட்டு கடிதம் கால்நடை பராமரிப்புத்துறைக்கு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 12.11.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.10.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு R. மயில்சாமி 12.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி உட்பட அனைத்து வார்டுகளிலும் அதிக அளவில் தெருநாய்கள் உள்ளன, அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு ரேபிஸ் உள்ளிட்ட நோய்கள் உள்ளன. குழந்தைகள், பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பெரியவர்களை கடித்து விடுவதோடு, இரண்டு சக்கர வாகனங்களில் செல்வோர் முன், குறுக்கே செல்வதால் வாகன ஓட்டிகள் கீழே விழுந்து விபத்துக்கள் ஏற்படுகின்றன. வளர்க்கப்படும் ஆடு, மாடு, கோழி போன்றவைகளை கடித்து விடுவதால் அவைகள் இறக்க நேரிடுகிறது. வீடுகளில் செல்லப்பிராணியாக வளர்த்து, பின்னர் தெருக்களில் விட்டு விடுவதால் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திடவும் சுற்றி திரியும் நாய்களைப் பிடித்து கருத்தடை செய்தும், வெறிநாய் தடுப்பூசி (ARV) போடவும் நடவடிக்கை எடுக்க கோரி மனு செய்திருந்தேன். ஆனால் இதுவரையில் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இந்நேர்வில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஆ. சரவணகுமார் என்பவர் 12.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்கு பிராணிகளின் பிறப்பு கட்டுப்பாடு (நாய்கள்) விதிகள் 2001 பிரிவு 4–ன்படி இந்திய பிராணி நல வாரிய நிதி உதவியுடன் நாய்களுக்கு பிறப்பு தடுப்பு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் தடுப்பூசி பணி மேற்கொள்ளுமாறு தெரிவித்து திண்டுக்கல் விலங்குகள் நல வாரியத்திற்கு வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி மூலம் 27.08.2024 நாளிட்ட மற்றும் 07.10.2024 நாளிட்ட நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் திண்டுக்கல் விலங்குகள் நல வாரியத்திலிருந்து விவரங்கள் பெறப்பட்டு விலங்கு பிறப்பு கட்டுப்படுத்துதல் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்" – என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரரின் புகார் மனுவில் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் அதிக அளவில் உள்ள நாய்களுக்கு ரேபிஸ் உள்ளிட்ட நோய்கள் உள்ளதாகவும், குழந்தைகள், பள்ளி மாணவ மாணவியர்கள், பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை நடந்து செல்வோர்களை கடித்து விடுவதால் பொது மக்கள் அச்சத்தில் உள்ளதாகவும், இரண்டு சக்கர வாகனங்களில் செல்வோர்களின் முன் குறுக்கே செல்வதால், வாகன ஓட்டிகள் கீழே விழுந்துவிடுவதாகவும், இப்பகுதியில் வளர்க்கப்படும், ஆடு, மாடு, கோழி போன்றவைகளையும் தெருநாய்கள் கடித்து விடுவதால் கால்நடைகள் இறக்க நேரிடுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் வீடுகளில் நாயை செல்லபிராணியாக வளர்த்து பின்னர் தெருக்களில் விட்டு விடுவதால் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவித்து, அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுபடுத்திடவும் சுற்றி திரியும் நாய்களைப் பிடித்து கருத்தடை செய்தும், வெறிநாய் தடுப்பூசி (ARV) போடவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேற்படி மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்கு பிராணிகளின் பிறப்பு கட்டுப்பாடு (நாய்கள்) விதிகள் 2001 பிரிவு 4–ன்படி இந்திய பிராணி நல வாரிய நிதி உதவியுடன் நாய்களுக்கு பிறப்பு தடுப்பு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் தடுப்பூசி பணி மேற்கொள்ள திண்டுக்கல் விலங்குகள் நல வாரியத்திற்கு வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி மூலம் 27.08.2024 நாளிட்ட மற்றும் 07.10.2024 நாளிட்ட நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

எனவே, புகார்தாரரின் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சமீப காலங்களில் நாய்களால் பொதுமக்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட நிகழ்வுகளை கருத்திற் கொண்டு, நடவடிக்கையினை துரிதப்படுத்தி விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு விவரத்தினை மனுதாரருக்கும், இம்முறை மன்ற நடுவத்திற்கும் தெரிவித்திட வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு, நவம்பர் 15 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புது விளாங்குடி,
மதுரை – 18

2. செயல் அலுவலர்,
வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூடபொ)